# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# பத்தாம் பத்து

## எட்டாம் திருவாய்மொழி - திருமாலிருஞ்சோலை
## தம்மிடத்து எம்பெருமான் இப்போது மிக விருப்பம் செய்வது கண்ட ஆழ்வார் முன்பு தம்மை அகல்வித்து இப்போது இப்படி இருத்தற்குக் காரணம் வினவி, கூற மாட்டாது நிற்கும் அவனது திறத்தை வியப்புற்று பேசுதல்

** திருமாலிருஞ்சோலை மலை * என்றேன் என்ன *
திருமால் வந்து * என் நெஞ்சு நிறையப் புகுந்தான் **
குரு மா மணி உந்து புனல் * பொன்னித் தென் பால் *
திருமால் சென்று சேர்விடம் * தென் திருப்பேரே 1

பேரே உறைகின்ற பிரான் * இன்று வந்து *
பேரேன் என்று * என் நெஞ்சு நிறையப் புகுந்தான் **
கார் ஏழ் கடல் ஏழ் * மலை ஏழ் உலகு உண்டும் *
ஆரா வயிற்றானை * அடங்கப் பிடித்தேனே 2

பிடித்தேன் பிறவி கெடுத்தேன் * பிணி சாரேன் *
மடித்தேன் மனை வாழ்க்கையுள் * நிற்பதோர் மாயையை **
கொடிக் கோபுர மாடங்கள் சூழ் * திருப்பேரான் *
அடிச் சேர்வது எனக்கு * எளிது ஆயின ஆறே 3

எளிதாயின ஆறு என்று * என் கண்கள் களிப்ப *
களிதாகிய சிந்தையனாய்க் * களிக்கின்றேன் **
கிளி தாவிய சோலைகள் சூழ் * திருப்பேரான் *
தெளிதாகிய * சேண் விசும்பு தருவானே 4

வானே தருவான் * எனக்கா என்னோடு ஒட்டி *
ஊன் ஏய் குரம்பை * இதனுள் புகுந்து ** இன்று
தானே தடுமாற்ற * வினைகள் தவிர்த்தான் *
தேன் ஏய் பொழில் * தென் திருப்பேர் நகரானே 5

திருப்பேர் நகரான் * திருமாலிருஞ்சோலை *
பொருப்பே உறைகின்ற பிரான் * இன்று வந்து **
இருப்பேன் என்று * என் நெஞ்சு நிறையப் புகுந்தான் *
விருப்பே பெற்று * அமுதம் உண்டு களித்தேனே 6

உண்டு களித்தேற்கு * உம்பர் என் குறை? * மேலைத்
தொண்டு உகளித்து * அந்தி தொழும் சொல்லுப் பெற்றேன் **
வண்டு களிக்கும் பொழில் சூழ் * திருப்பேரான் *
கண்டு களிப்பக் * கண்ணுள் நின்று அகலானே 7

கண்ணுள் நின்று அகலான் * கருத்தின் கண் பெரியன் *
எண்ணில் நுண் பொருள் * ஏழ் இசையின் சுவை தானே **
வண்ண நன் மணி மாடங்கள் சூழ் * திருப்பேரான் *
திண்ணம் என் மனத்துப் * புகுந்தான் செறிந்து இன்றே 8

இன்று என்னைப் பொருள் ஆக்கித் * தன்னை என்னுள் வைத்தான் *
அன்று என்னைப் புறம் போகப் புணர்த்தது * என் செய்வான்? **
குன்றென்னத் திகழ் மாடங்கள் சூழ் * திருப்பேரான் *
ஒன்று எனக்கு அருள் செய்ய * உணர்த்தல் உற்றேனே 9

** உற்றேன் உகந்து பணி செய்து * உன பாதம்
பெற்றேன் * ஈதே இன்னம் * வேண்டுவது எந்தாய்! **
கற்றார் மறை வாணர்கள் வாழ் * திருப்பேராற்கு *
அற்றார் அடியார் தமக்கு * அல்லல் நில்லாவே 10

** நில்லா அல்லல் * நீள் வயல் சூழ் திருப்பேர் மேல் *
நல்லார் பலர் வாழ் * குருகூர்ச் சடகோபன் **
சொல்லார் தமிழ் * ஆயிரத்துள் இவை பத்தும்
வல்லார் * தொண்டர் ஆள்வது * சூழ் பொன் விசும்பே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---